**நோர்த்சீ லிமிட்டட் -2019/2020**

---

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

நோர்த்சீ லிமிட்டட்டின் (''கம்பனி'') 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கம்பனியின் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயமொன்றை நான் தெரிவிக்கவில்லை. இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

நிதி நிலைமை கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்ட பொருண்மையான விடயங்கள், மாற்று வழிகளில் என்னால் உறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ முடியாதிருந்தன.

இந்த விடயங்களின் விளைவாக, பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத தொகைகள் மற்றும் நிதி நிலைமை கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உருவாக்கும் கூறுகள் தொடர்பாக ஏதேனும் சீராக்கங்கள் அவசியமானதா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 01 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை பொறுப்பின் கீழ் அடுத்த பன்னிரண்டு மாதங்களில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய பொறுப்புக்கள் காட்டப்பட வேண்டும். அதற்கு முரணாக கம்பனி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் ரூபா 64,177,709 தொகையான வியாபார கடன்கொடுத்தோரை காட்டியிருந்தது. | எமது மூலப்பொருட்களின் வழக்கமான வழங்குநர்களாக காணப்படுகின்ற ஜே.பி பெர்னாண்டோ மற்றும் அர்லீன் (பிறைவேட்) லிமிட்டட் தவிர்ந்த ஒரு வருடத்திற்குள் கம்பனி வியாபார கடன்கொடுத்தோரை தீர்ப்பதற்கான நிலையில் இல்லாததால் அவை நடைமுறையல்லா பொறுப்புகளாக உள்ளதுடன் அவர்களிற்கு செலுத்த வேண்டிய மீதிகள் சுழற்சி அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. | நியமத்தின் பிரகாரம் வியாபார கடன்கொடுத்தோர் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டும். |
| (ii) | இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 07 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்ட கால சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் காசுக் கொடுப்பனவு முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சலாக காட்டப்பட வேண்டும். அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 545,526 தொகையான சொத்துக்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்றானது முதலீட்டு நடவடிக்கையாக வருமானத்தை வழங்கும் நிலையான சொத்துக்களை மாத்திரமே கருதுகிறது. இதன் விளைவாக, இயந்திரங்களின் கொள்வனவு மாத்திரமே முதலீட்டு நடவடிக்கையாகக் கருதப்பட்டதுடன், ஏனைய எந்தப் பொருட்களும் வருமானத்தை வழங்காததால் அவை அவ்வாறு கருதப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் எல்கேஏஎஸ் பின்பற்றப்படுகிறது என கம்பனி குறிப்பிட்டுள்ளது. எனவே, எல்கேஏஎஸ் 07 இன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து நிலையான சொத்துக்களும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 37 இன் 10 ஆம் பிரிவின் பிரகாரம் கடந்த கால நிகழ்வுகளிலிருந்து ஏதேனும் சாத்தியமான கடப்பாடுகள் ஏற்பட்டால் அவை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். அதற்கு முரணாக நட்டஈடு கோரி முன்னாள் ஊழியர் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்த போதிலும் கம்பனி இவ் வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் ரூபா 615,360 தொகையை வைப்புச் செய்திருந்தும் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்பாக இது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கம்பனி நீதிமன்ற கட்டளையை மாத்திரம் பின்பற்றியிருந்ததுடன் வழக்குக்கு எதிரான எமது மேன்முறையீடு வெற்றியடைந்தால் மீளளிக்கப்படக்கூடிய ரூபா 615,360 வைப்பை மேற்கொண்டிருந்தது. ஆகையால் வழக்கு நடந்து கொண்டிருப்பதாலும், கம்பனியின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாலும், இது நிகழத்தக்க பொறுப்பொன்றாக கருதப்பட முடியாதிருந்தது. முன்னாள் ஊழியரின் சேவைகள் கம்பனியின் நடத்தை விதிகளை மீறியதால் நிறுத்தப்பட்டன. | நிதிக்கூற்றுக்களில் எல்கேஏஎஸ் பின்பற்றப்படுகிறது என கம்பனி குறிப்பிட்டுள்ளது. அதன் பிரகாரம் சாத்தியமான நிகழத்தக்க பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும் அல்லது நிகழத்தக்க பொறுப்பின் நிச்சயத்தன்மையின் இயல்புத்தன்மை வழங்கப்பட வேண்டும். |
| (iv) | கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்டு எதிர்பார்ப்பில் உள்ள மாற்றம் எல்கேஏஎஸ் 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடொன்றின் மாற்றமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். அதற்கு முரணாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு கம்பனியால் இன்னும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 3,549,372 கிரயத்திலான சொத்துக்கள் நியமத்துடன் இணங்கியிருக்கவில்லை. | இதனை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். | இதனை சீர்செய்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 20 இன் பிரகாரம் நியாயமான பெறுமதியில் காசற்ற மானியங்கள் உட்பட சொத்துக்கள் தொடர்பான மானியங்கள் நிதி நிலைமைக் கூற்றில் பிற்போடப்பட்ட வருமானமாக மானியங்களை நிர்ணயிப்பதன் மூலமாகவோ அல்லது சொத்தின் தொகையைக் கழிப்பதன் மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கு முரணாக கம்பனியானது சொத்துக்களிற்குரிய பயன்தரு ஆயுட்காலத்தை கருத்தில் கொள்ளாமல் 2018/2019 இல் ரூபா 103,500,000 தொகையும் | அரசாங்க மானியமானது திருப்பிச் செலுத்தப்படாததால் 2015/16 நிதியாண்டு முதல் 2019/20 நிதியாண்டு வரை மூலதனமாக வகைப்படுத்தப்பட்டது. ஆகையால் நாங்கள் மானியத்தை ஏற்கனவே பயன்படுத்தியுள்ளதால் நடைமுறையல்லா பொறுப்பின் கீழ் அதனை பிற்போடப்பட்ட வருமானமாகக் கருதுவது நடைமுறையில் இல்லை. மேலும், கணக்காய்வாளர்கள் 2015/16, 2016/17, 2017/18 | நிதிக்கூற்றுக்களில் எல்கேஏஎஸ் பின்பற்றப்படுகிறது என கம்பனி குறிப்பிட்டுள்ளது. அதற்கிணங்க எல்கேஏஎஸ் 20 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் அரசாங்க மானியங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2016/2017 இல் ரூபா 99,968,373 தொகையுமான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட சொத்துக்களிற்குரிய மொத்த அரசாங்க மானியங்கள் காலக்கழிவிடப்பட்டிருந்ததுடன் அறிக்கையிடும் திகதி வரை இத் தவறு சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 2019 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான திரண்ட நட்டம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மற்றும் 2018/19 நிதியாண்டுகளில் மானியத்தின் கணக்கீட்டை அங்கீகரித்திருந்ததுடன் சர்வதேச நியமங்கள் மானியத்தை மூலதன மானியங்களாக கருதப்படுவதற்கு அனுமதிக்கின்றன. எனினும், அரசாங்க மானியத்தின் வகைப்படுத்தல் திறைசேரி பிரதிநிதிகளால் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கேள்விக்குள்ளாக்கப்பட்டதுடன் எல்கேஏஎஸ் 20 இற்கு இணங்குமாறும் அதனை பிற்போடப்பட்ட வருமானமாகக் கருதி நடைமுறையல்லாத பொறுப்பாக வகைப்படுத்துமாறும் நாங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டோம். 2020/21 நிதியாண்டு முதல் அமுலுக்கு வரும் வகையில் அரசாங்க மானியத்தின் வகைப்படுத்தல் சீர்செய்யப்பட்டு, மானியமானது நடைமுறையல்லா பொறுப்பின் கீழ் பிற்போடப்பட்ட வருமானமாக வகைப்படுத்தப்படும் என இணங்கப்பட்டது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தலைமை அலுவலக வளாகத்திற்கான 2020 ஏப்ரல் மாதத்துக்காக முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 200,000 வாடகை நடைமுறை சொத்துகளின் கீழ் முற்பணமாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக வருமான கூற்றில் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே, ஆண்டின் தேறிய நட்டம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் நடைமுறைச் சொத்துக்கள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | நடைமுறை ஆண்டில் வாடகை முற்பணம் முறையாகக் கணக்கீடு செய்யப்படும். | நிதியாண்டுக்குரிய வாடகைச் செலவினங்கள் மாத்திரமே விரிவான வருமான கூற்றிற்கு உள்ளடக்கப்பட வேண்டும். அத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் முற்பணம் அல்லது முற்கொடுப்பனவுகளாக கருதப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) ரூபா 465,300 மீண்டெழும் செலவினம் மூலதனச் செலவினமாக பிழையாக இனங்காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான தேறிய நட்டம் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் நடைமுறையல்லா சொத்துக்கள் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | செலவினங்களில் ஒன்றாக இருப்பதாலும், தொடர்புடைய சொத்துக்களுக்கு பெறுமதியை சேர்ப்பதாலும், மிண்டெழும் செலவினங்கள் அல்ல என்பதாலும், செலவினங்கள் மூலதனமாக்கப்பட்டன. | இயல்பின் பிரகாரம் செலவினங்களை சரியாக வகைப்படுத்தி அதற்கேற்ப கணக்கீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) 2018 ஆம் ஆண்டில் அரச வங்கியிடமிருந்து எல்சி கடன் பெறப்பட்டதன் காரணமாக 2018 முதல் 2020 யூலை வரையான காலப்பகுதி தொடர்பாக ஏற்பட்ட ரூபா 14,420,368 தொகையான வட்டிச் செலவினம் நடைமுறை காலப்பகுதியில் செலவினங்களாகக் காட்டப்பட்டிருந்தன, ஆகையால் ஆண்டுக்கான தேறிய நட்டம் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | ஆண்டு ரீதியான இறக்குமதி கடன் வட்டி விபரங்களின் சரியான பிரித்தெடுப்பை இலங்கை வங்கி எங்களுக்கு வழங்கியிருக்காததுடன் 2018/19 ஆம் ஆண்டிற்கான தொடர்புடைய நிதிக்கூற்றுக்களில் 2018/19 ஆம் ஆண்டிற்கான இறக்குமதி கடன் வட்டி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக மார்ச் 16 முதல் மே 11 வரை கம்பனி மூடப்பட்டதன் காரணமாக கணக்குகளை மூடுதல் தாமதமானதால் 2020 யூலையில் கணக்குகள் மூடப்பட்ட திகதியில் உள்ள முழு வட்டியும் 2019/20 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கிறது. 2020/21 ஆம் நடைமுறை ஆண்டில் இந் நிலைமை சீர்செய்யப்பட்டு அதற்கிணங்க இறக்குமதி கடன் வட்டி அறவிடப்படும். | முகாமைத்துவம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய செலவினங்களை இனங்கண்டு இலாபம்/ நட்டம் மற்றும் சொத்துக்கள்/ பொறுப்புகளை அதிகரித்தோ அல்லது குறைத்தோ காட்டுவதை தவிர்க்கும் வகையில் நிதிக்கூற்றை தயாரிக்க வேண்டும். |

### 1.5.3 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இல. 01 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது முகாமைத்துவம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்வதற்கான நிறுவனத்தின் இயலுமையை மதிப்பீடு செய்து ஏதேனும் பொருண்மையான நிச்சயமற்ற தன்மைகள் காணப்பட்டால் அவற்றை வெளிப்படுத்த வேண்டும். அதற்கு முரணாக நிதிக்கூற்றுக்களை | நோர்த்சீ லிமிட்டட்டானது 100 சதவீத திறைசேரிக்குச் சொந்தமான கம்பனியாக உள்ளதுடன் இது தொடக்கத்திலிருந்தே நிச்சயமற்ற தன்மையை எதிர்கொண்டுள்ளது. கூட்டிணைந்த திட்டத்தில் எமது பிரச்சனைகளைக் குறிப்பிட்டுள்ளதுடன் அதனை வெற்றிகொள்வதற்கு | நிதிக்கூற்றுக்களை தயாரிகும் நேரத்தில் உள்ள நிச்சயமற்ற தன்மைகளை முகாமைத்துவம் நியமங்களுக்கு இணங்கக் கருத்தில் கொண்டு நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துபவர்களுக்கு கம்பனியின் |

| | | |
|---|---|---|
| தயாரிக்கும் போது பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்பட்ட போதிலும் அவை குறிப்புகளாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முயற்சித்து வருகின்றோம். | உண்மையான நிலைமையை சுட்டிக்காட்ட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்காக ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

பின்வரும் மீதிகளிற்கான ஆவணச் சான்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| பெறவேண்டிய கணக்குகள் | 15,001,943 | கடன்பட்டோர் உறுதிப்படுத்தல் | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தொடர்புடைய ஆவணங்களை நாங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்து உறுதிப்படுத்தியுள்ளோம் ஆகையால் உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படவில்லை எனக் குறிப்பிடுவது தவறானதாகும். மேலும், வெளிநாட்டு கடன்கொடுத்தோரான M/S. சிதம்பரம் பிறைவேட் லிமிட்டட் மற்றும் வீகே சினிமா என்டர்டெயின்மென்ட், ஷிவ் இன்டர்நஷனல், பூநகரி எவ்சீஎஸ்யூ போன்ற 10 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாக உள்ள பழைய கடன்கொடுத்தோர் ஆகியோரிடமிருந்து எங்களால் உறுதிப்படுத்தலைப் பெற முடியாதிருந்தது. மேலும், எங்களின் தற்போதைய மூலப்பொருள் வழங்குநராக ஜே.பி. பெர்னாண்டோ அன்ட் சன்ஸ் உள்ளதன் காரணமாக மீதியை தீர்ப்பனவு செய்யும் செயன்முறையில் நாங்கள் உள்ளதுடன் அவர்களிமிருந்து நாங்கள் உறுதிப்படுத்தலை பெற்றிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் உள்ளதன்மை, உரிமைத்துவம், சரியான தன்மை மற்றும் முழுமைத் தன்மை ஆகியவற்றை நிரூபிப்பதற்கு முகாமைத்துவம் அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் வைத்திருக்க வேண்டியதுடன் அவை கணக்காய்வாளர்களிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| செலுத்த வேண்டிய L/C கடன் வட்டி | 14,420,368 | வங்கி உறுதிப்படுத்தல் | | |
| வலை விற்பனைக்கான முற்பணம் | 2,633,501 | விபரமான பட்டியல்/ உறுதிப்படுத்தல் | | |
| கடன்கொடுத்தோர் | 64,133,692 | கடன்கொடுத்தோர் உறுதிப்படுத்தல் | | |
| தவணைக் கடன் - ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியவை | 10,000,000 | | | |
| பரந்தன் இரசாயனங்கள் | 2,000,000 | கடன்கொடுத்தோர் உறுதிப்படுத்தல் | | |
| நெல் சந்தைப்படுத்தல் சபை | 1,000,000 | | | |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டத்தின் 50 ஆம் பிரிவு | பங்கு வழங்கல், 5 ஆம் பிரிவின் கீழ் கம்பனியொன்றை கூட்டிணைத்த உடனேயே, கம்பனி அந்த நபருக்கு உரித்துள்ள பங்கை இணைப்பதற்காக விண்ணப்பத்தில் பெயரிடப்பட்ட ஒவ்வொரு பங்குதாரருக்கும் வழங்க வேண்டும். கம்பனி பங்குகளை வழங்கியிருந்த போதிலும் 2001 இல் கம்பனி கூட்டிணைக்கப்பட்டு, கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் மீளப்பதிவு செய்யப்பட்டதால் அதன் பங்குதாரர்களுக்கு பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி கூட்டிணைக்கப்பட்டதிலிருந்து 2014/15 நிதியாண்டு வரை ரூபா 700.00 கூறப்பட்ட மூலதனத்தை கொண்டிருந்தது, இது ஏழு பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட ஒவ்வொன்றும் ரூபா 100 ஆன ஏழு பங்குகளைக் உள்ளடக்கியிருந்தது. பின்னர், இது 2015/16 ஆம் ஆண்டில் இரத்து செய்யப்பட்டு, சொத்துக்கள் கூறப்பட்ட மூலதனமாக மாற்றப்பட்டது. முன்னைய முகாமைத்துவம் எந்தவொரு பங்குச் சான்றிதழையும் வழங்கியிருக்கவில்லை, அத்துடன் இந்த விடயத்தில் எங்களுக்கு வழிகாட்டுமாறு பொதுத் திறைசேரிக்கு கோரிக்கையொன்றை அனுப்பியிருந்தோம், ஆனால் எங்களுக்கு எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. | பங்குச் சான்றிதழ்கள் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும். |
| (ii) | 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டத்தின் 151 மற்றும் 220 ஆம் பிரிவுகள் | தேறிய சொத்துக்களின் நிலை ரூபா 104.46 மில்லியன் எதிர்மறையாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் முகாமைத்துவம் உரிய பிரிவுகளின் தேவைப்பாட்டிற்கு இணங்க எந்தவொரு நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | பல்வேறு காரணங்களால் கம்பனியால் EGM ஐ நடாத்த முடியவில்லை. ஆனால் எதிர்காலத்தில் நிலைமை சாதகமாக இருக்கும் போது அதிவிசேட பொதுக் கூட்டத்தை நடாத்தி பிரச்சினைகளை சீர்செய்வோம் என நாங்கள் நம்புகிறோம். | கம்பனி அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி EGM இற்கு அழைப்பு விடுத்து, எதிர்காலத்தில் அதனை வெற்றிகொள்வதற்கான திட்டத்துடன் பங்குதாரர்களுக்கு விடயத்தை விளக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(அ) பிரிவு | 2010 ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மேலும் இரண்டு மீன்பிடி தொழிற்சாலைகள் ஊழியர்களுடன் கம்பனிக்கு சேர்க்கப்பட்டிருந்த போதிலும் பதவியணி திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | யாழ்ப்பாணத் தொழிற்சாலையின் பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் நோர்த்சீ லிமிட்டட்டின் மொத்த பதவியணியினரிற்கும் பொது திறைசேரியிடம் இருந்து பதவியணியினர் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். | வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு என்பன பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு பெறப்பட வேண்டும். |

## 1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (வற்) சட்டத்திற்கு முரணாக ரூபா 184,418,408 (2001 நவம்பர் முதல் 2019 திசெம்பர் வரை தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியுள்ளது) தொகையான பெறுமதி சேர் வரி கம்பனியால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், சரியான நேரத்தில் வற் செலுத்தப்படாததன் காரணமாக கம்பனி ரூபா 27,963,374 தண்டப்பணத்தை செலுத்த வேண்டியிருந்தது. | பெறுமதி சேர் வரியை செலுத்தாததற்காக கம்பனி எந்தவொரு தண்டப்பணத்தையும் செலுத்தியிருக்கவில்லை, அத்துடன் அதனை விட்டுவிடுவதற்கு நிதி அமைச்சிற்கு மேன்முறையீடு அனுப்பப்பட்டுள்ளது. | தேவையற்ற தண்டப்பணக் கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் உரிய வரிச் சட்டங்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ii) | 2009 இன் 9 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) சட்டத்திற்கு முரணாக ரூபா 28,580,611 (2001 நவம்பர் முதல் 2019 திசெம்பர் வரையிலான காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட வேண்டியுள்ளது) தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரியை கம்பனி செலுத்தியிருக்கவில்லை. மேலும், என்பீரீயை சரியான நேரத்தில் செலுத்தாததன் காரணமாக அத் திகதியிலுள்ளவாறு கம்பனி ரூபா 4,713,899 தண்டப்பணத்தை செலுத்த வேண்டியிருந்தது. | தேசத்தை கட்டியெழுப்பும் வரியை செலுத்தாததற்காக கம்பனி எந்தவொரு தண்டப்பணத்தையும் செலுத்தியிருக்கவில்லை, அத்துடன் அதனை விட்டுவிடுவதற்கு நிதி அமைச்சிற்கு மேன்முறையீடு அனுப்பப்பட்டுள்ளது. | தேவையற்ற தண்டப்பணக் கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் உரிய வரிச் சட்டங்களுடன் இணங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 101,028,366 தொகையான நட்டமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 486,312 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 100,542,054 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விற்பனைகள் ரூபா 121,184,795 ஆல் குறைவடைந்தமை மற்றும் முன்னைய ஆண்டில் கம்பனி ரூபா 109,914,354 தொகையான வாழ்வாதார செயற்திட்ட மானியத்தை பெற்றிருந்தமை மற்றும் மீளாய்வாண்டின் போது அத்தகைய மானியம் ரூபா 4,453,409 மாத்திரமே பெறப்பட்டிருந்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| விடயம் | 2019/2020 | 2018/2019 | அதிகரிப்பு/ (குறைவு) | சதவீத அதிகரிப்பு/ (குறைவு) |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மொத்த புரள்வு | 260,508,899 | 245,555,435 | 14,953,465 | 6.09 |
| தொழில் வேலை வருமானம்/ சில்லறை விற்பனைகள் | 332,607 | 1,301,545 | (968,938) | (74.45) |
| வாழ்வாதார செயற்திட்டம் | 4,453,409 | 109,914,354 | (105,460,945) | (95.95) |
| புனர்வாழ்வு இணைப்பு (Rehabilitation Cording) அலுவலகம் | - | 3,955,365 | (3,955,365) | (100.00) |
| RFO மன்னார் கிராமிய அமைப்பு | - | 15,979,346 | (15,979,346) | (100.00) |
| ஏனைய விற்பனைகள் | 1,951,905 | 16,899,659 | (14,947,754) | (88.45) |
| தரகுகள் | 4,433,304 | 3,334,052 | 1,099,252 | 32.97 |
| திருத்தம் மற்றும் பராமரிப்பு - மோட்டார் வாகனங்கள் | 1,372,032 | 1,079,268 | 292,764 | 27.13 |
| விளம்பர செலவினங்கள் | 2,605,276 | 195,950 | 2,409,326 | 1229.56 |
| சட்ட கட்டணங்கள் | 289,800 | 219,000 | 70,800 | 32.33 |
| காப்புறுதி | 502,756 | 92,372 | 410,384 | 444.27 |
| நிதி செலவினங்கள் | 17,132,296 | 11,384,023 | 5,748,273 | 50.49 |

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான கம்பனியின் மொத்த புரள்வு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 14,953,465 ஆல் அல்லது 6.09 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதேநேரம், தொழில் வேலை வருமானம்/ நானாவித விற்பனைகள், வாழ்வாதார

செயற்திட்டம், புனர்வாழ்வு இணைப்பு அலுவலகம், RFO மன்னார் கிராமிய அமைப்பு மற்றும் ஏனைய விற்பனைகள் என்பன முறையே 74.45 சதவீதம், 95.95 சதவீதம், 100 சதவீதம், 100 சதவீதம் மற்றும் 88.45 சதவீதத்தால் குறைவடைந்துள்ளன.

(ஆ) 2019/20 ஆம் ஆண்டில் நேரடி விற்பனைகள் ரூபா 14,953,464 ஆல் அதிகரித்திருந்ததால் 2019/20 ஆம் ஆண்டில் விற்பனை தரகு 32.97 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கண்காட்சியின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019/20 ஆம் ஆண்டில் கம்பனி ரூபா 2,409,326 ஆல் அதிகப்படியான விளம்பரக் கட்டணத்தை தீர்ப்பனவு செய்திருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டில் விளம்பரப்படுத்தல் கிரயம் 1230 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஈ) 2011-2015 ஆம் ஆண்டுகளுக்கான வற் பொறுப்பை செலுத்தாததற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் அதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்காக கம்பனி சட்டக் கட்டணங்களை செலுத்தியிருந்தது, ஆகையால் இது 32.33 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(உ) 2018/19 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருக்காத பங்குகளிற்கு 2019/20 ஆம் ஆண்டில் காப்புறுதி செய்வதற்கு கம்பனி ரூபா 410,384 மேலதிக காப்புறுதி தவணைப்பணத்தை செலுத்த வேண்டியிருந்தது. இதன் மூலம் காப்புறுதி கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 444.27 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஊ) 2019/20 ஆம் ஆண்டில் மூலப்பொருள் ஹைப்போ (hypo) கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டி திரண்டதன் காரணமாக நிதிச் செலவினம் 50.49 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2020 மார்ச் 31 | 2019 மார்ச் 31 |
|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | |
| மொத்தலாப விகிதம் | (28.93) | 7.78 |
| தேறியலாப விகிதம் | (42.69) | 0.14 |
| ஈடுபடுத்திய மூலதனம் மீதான திரும்பல் | (1840.59) | 0.07 |
| **செயற்பாட்டு விகிதம்** | | |
| சரக்கிருப்பு நாட்கள் | 75 | 126 |
| வியாபார கடன்பட்டோர் நாட்கள் | 21 | 16 |
| வியாபார கடன்கொடுத்தோர் நாட்கள் | 53 | 35 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | |
| நடைமுறை விகிதம் | 0.23 :1 | 0.43:1 |
| விரைவு விகிதம் | 0.06:1 | 0.08:1 |

### 2.3.1 இலாபத்தன்மை விகிதங்கள்

(அ) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் மொத்தலாபம் 7.78 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் இது 23.93 சதவீத எதிர்மறை பெறுமதி வரை குறைவடைந்துள்ளது.

(ஆ) தேறியலாப விகிதம் முன்னைய ஆண்டின் 0.14 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 42.69 சதவீத எதிர்மறை பெறுமதி வரை குறைவடைந்துள்ளது.

(இ) ஈடுபடுத்திய மூலதனம் மீதான திரும்பல் முன்னைய ஆண்டின் 0.07 சதவீதத்திலிருந்து 2019/20 ஆம் ஆண்டில் 1840.59 சதவீத எதிர்மறை பெறுமதி வரை குறைவடைந்துள்ளது.

(ஈ) 2019/20 ஆம் ஆண்டில் சரக்கிருப்பு நாட்கள் 126 இல் இருந்து 75 ஆக குறைவடைந்துள்ளது.

(உ) 2019/20 ஆம் ஆண்டில் விற்பனை வருமானம் குறைவடைந்ததன் காரணமாக, 2019/20 ஆம் ஆண்டில் 16 இல் இருந்து 26 ஆக வியாபார கடன்பட்டோர் நாட்கள் அதிகரித்துள்ளன.

(ஊ) 2019/20 ஆம் ஆண்டில் வியாபார கடன்கொடுத்தோர் நாட்கள் 35 இல் இருந்து 53 ஆக அதிகரித்திருந்தன. மேலும் 2019/20 ஆம் ஆண்டில் மூலப்பொருள் வசதிக் கடனுக்கான வட்டி திரண்டதன் காரணமாக நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீரவில மற்றும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கம்பனியின் தொழிற்சாலைகள் மற்றும் நிரந்தர கட்டிடங்கள் ரூபா 11,247,881 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் காணியின் உரிமைத்துவமானது கம்பனியின் பெயருக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை அல்லது மாறாக கம்பனிக்கு காணி குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | நோர்த்சீ லிமிட்டட்டின் தற்போதைய முகாமைத்துவம் யாழ்ப்பாணம் மற்றும் வீரவில தொழிற்சாலைகளின் காணிகளின் உரிமைத்துவம் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். | எதிர்காலத்தில் ஏற்படும் ஏதேனும் சட்டச் சிக்கலைத் தவிர்ப்பதற்கும் அதே வளாகத்தில் முதலீடு மற்றும் வணிகத்தைத் தொடர்வதைப் பாதுகாப்பதற்கும் காணியின் உரிமைத்துவத்தை கம்பனியின் பெயருக்கு மாற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனி 2018 இல் ரூபா 3,076,305 அரசாங்க மானியத்தை செலவிட்டு லுனுவில தொழிற்சாலைக்கு கழிவு நீர் முறைமையைக் கொள்வனவு செய்திருந்ததுடன் பின்னர் 2019 இல் அதற்காக ரூபா 2,531,801 செலவிடப்பட்டது. எனினும், பொறி செயலற்ற நிலையில் உள்ளதுடன் 2021 மே 31 வரையிலும் செயற்படவில்லை. | கம்பனி கழிவு நீர் சுத்திகரிப்பு பொறி செயற்படாதமைக்காக அது தொடர்பான ஏறத்தாழ ரூபா 7.3 மில்லியன் தொகையான செயலாற்றல் பிணைமுறியை காசாக்கியிருந்ததுடன் பகுதியளவு பணத்தை அறவீடு செய்திருந்தது. இந்தச் சொத்து முன்னைய முகாமைத்துவத்தால் நிறுவப்பட்டதுடன் அதன் செயற்படாத நிலைமைக்கு அவர்களே பொறுப்பாவார்கள். | இந்த விடயம் தொடர்பான விசாரணைக்குப் பின்னர் விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக முகாமைத்துவம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீடு, பெறுகைத் திட்டம், மனித வளத் திட்டம், மீள்கொடுப்பனவுத் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் உள்ளடங்கலாக அடுத்த நிதியாண்டில் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய வணிகச் செயற்பாடுகளை உள்ளடக்கி செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அத்தகைய செயல்நடவடிக்கைத் திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019/2020 ஆம் ஆண்டில் நாங்கள் எந்தவொரு மானியத்தையும் பெற்றிருக்கவில்லை என்பதாலும் அமுல்ப்படுத்தப்படுவதற்கு குறித்துரைக்கப்பட்ட வணிகச் செயற்பாடு எதனையும் கொண்டிருக்காததாலும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் உரிய சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்கி கம்பனியின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். |